[1978 செப்டம்பர் 1

வட்டச் சத்துணவுத் திட்டம்

* வினா 28—திரு. க. அரங்கசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட்டச் சத்துணவுத் திட்டத்தை, ஒவ்வொரு ஐந்தாண்டுகளுக்கும், ஒவ்வொரு வட்டாரத்திற்கு மாற்றுவதை நிறுத்தி எல்லா வாட்டாரத்திற்கும் எப்பொழுதும் செயல்பட மறு பரிசீலனை செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) & (ஆ) இந்தத் திட்டம் மத்திய அரசு, "யூனிசெப்" எனும் "பன்னாட்டு குழந்தைகள் அவசர நல நிதி" நிறுவனம், மாநில அரசு ஆகியவை இணைந்து செயல்படுத்தும் தனித் திட்டமாகும். இதை எல்லா ஒன்றியங்களிலும் எப்பொழுதும் நிரந்தரமாகச் செயல்படுத்த இயலாது. அத்தகு 'கருத்துரு' எதும் இல்லை.

திரு. க. அரங்கசாமி: தலைவர் அவர்களே, இப்போது ஒவ்வொரு 5 ஆண்டுக்கும் வெவ்வேறு பகுதிக்கும் அது மாற்றப்படுவதால் ஏழைச் சிறுவர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே இதை மீண்டும் மறுபரிசீலனை செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப்போல் தனியாக மாநில அரசு மட்டும் நடத்துகிற திட்டம் அல்ல. யூனிசெப் நிறுவனம், மத்திய அரசு ஆகியவற்றின் துணையோடு சேர்ந்து நடத்தப்படுகிற திட்டம். ஆகவே அவர்கள் குறிப்பிட்ட அளவிற்கு உதவி செய்வார்கள். 5 ஆண்டுகளுக்குப் பிறகு அந்தத் திட்டத்தைத் தொடர்ந்து நடத்தும் பொறுப்பை ஒன்றியங்கள்தான் எடுத்துக் கொள்ள வேண்டும்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் ஒரு ஆண்டுக் காலத்திற்குத் தான் ஒன்றியத்திலே நடத்தப்படுகிறது, தொடர்ந்து யூனிசெப் நிறுவனமும், மத்திய அரசும் எவ்வளவு காலத்திற்கு இதைச் செய்யும் என்பதை அறிவிப்பார்களா ?

1978 செப்டம்பர் 1]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : ஒரு ஆண்டுக்கு அல்ல, 5 ஆண்டுகளுக்கு ஒன்றியங்களிலே தொடர்ந்து நடத்தப்படுகிற திட்டம்.

திருவான்மியூரில் போடப்பட்ட குழாய்க் கிணறுகள்.

* வினா 29—திரு. **துரை கலியமூர்த்தி :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசு உதவியால் திருவான்மியூர் போன்ற இடங்களில் குடி தண்ணீருக்காக எத்தனை குழாய்க் கிணறுகள் போடப்பட்டுள்ளன ?

(ஆ) அதன் மூலம் சென்னைக்குக் குடி தண்ணீர் எப்போது கிடைக்கும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மத்திய அரசு உதவியால் திருவான்மியூரில் குழாய்க் கிணறுகள் ஏதும் போடப்படவில்லை.

(ஆ) இக் கேள்வி எழவில்லை.

திரு. துரை கலியமூர்த்தி: திருவான்மியூர் வரையிலே மத்திய அரசால் 8 குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டதாகவும் அதை இப்போது மத்திய அரசு காலி செய்து போய்விட்டதாகவும் கூறுகிறார்கள். அங்கே 'டெஸ்ட்' கூட செய்யப்படவில்லை என்று கூறுகிறார்கள். அது எந்த அளவிற்கு இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

(முற்பகல் 9-30)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவா வர்களே, ஏற்கனவே நான் சொன்னதைப்போல மத்திய அரசு உதவியால் திருவான்மியூரில் குழாய்க் கிணறுகள் ஏதும் போடப் படவில்லை. ஆனால் மாநில அரசின் உதவியால் 15 குழாய்க் கிணறுகள் போடப்பட்டுள்ளன.